[9th September 1960

SRI P. G. MANICKAM : உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினர்களை டைரக்டர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால், அவர்களுக்கு என்ன யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : பொதுவாக, கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக, அதை வளர்க்கவேண்டுமென்று நினைக்கிறவர்களாகப் பார்த்து ரிஜிஸ்த்ரார் அவர்கள் "நாமினேட்" செய்கிறார்கள்.

SRI P. S. CHINNADURAI : விவசாய பாங்குகளுக்கு டைரக்டர்களை நியமனம் செய்வதைக் காட்டிலும், அதிலே பங்குதாரர்களாக இருக்கும் விவசாயிகளே அந்த பாங்குக்கு உரிய டைரக்டர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படியாக விட்டுவிடுவது சிறந்த ஜனநாயக முறை அல்லவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த முறை இப்பொழுது இல்லை என்று யார் சொன்னார்கள் என்று எனக்குப் புரியவில்லை. முதன் முதலில் பாங்குகளை ஆரம்பிக்கும்போது எல்லோருக்கும் தெரியாது. அதனால் சர்க்கார் ஆரம்பித்து ஷேர் காபிடல் முதலியவை எடுத்துக்கொள்ளும் காரணத்தால் ஒருசில வருஷங்களுக்கு முதல் நாமினேஷன் செய்கின்றோம். அதற்குப் பிறகு நாமினேஷன் செய்வதில்லை. அதில் சர்க்கார் பங்கெடுத்துக்கொள்ளும் காரணத்தால் அவர்களுக்கு ஒரு டைரக்டர் ஸ்தானம் உண்டு. அதை மாத்திரம் இரண்டாவது, மூன்றாவது முறையாக நடக்கும் போர்டுகளில் நாங்கள் நாமினேஷன் செய்கின்றோம்.

Camphor

*581 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் சென்னை ராஜ்யத்திற்கு எவ்வளவு கர்ப்பூரம் இறக்குமதியாயிற்று ?

(ஆ) இன்னும் எவ்வளவு தேவை ?

(இ) சென்னை ராஜ்யத்தில் கர்ப்பூர உற்பத்தியை அதிகரிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have permitted the State Trading Corporation to import camphor and distribute it to the actual users on an All-India basis. During 1959 and 1960 a quantity of 70,654 (seventy thousand six hundred and fifty-four) lb. were distributed by the State Trading Corporation to the actual users in Madras State. Information is not available regarding the actual requirements of camphor for Madras State.

(*c*) Camphor is not produced in Madras State.

SRI S. NAGARAJA MONIGAR : கர்ப்பூரத்தின் தேவை நமது சென்னை ராஜ்யத்திலே வருஷத்திற்கு வருஷம் அதிகரித்து வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தேவையைப் பற்றி எங்களிடத்தில் தகவல் இல்லை.

SRI P. S. CHINNADURAI : நம்முடைய ராஜ்யத்தில் பொதுவாக கடவுள் நம்பிக்கை அதிகம். மற்ற ராஜ்யங்களைவிட சூடம் கொளுத்துவதும் இங்கே மிகவும் அதிகம். மக்களுடைய சௌகரியத்தை உத்தேசித்தும், இந்த ராஜ்யத்தின் பணம் இங்கேயே இருப்பதற்கும் அனுகூலமாக கர்ப்பூரம் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை இங்கே ஏற்படுத்த ராஜ்ய சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கர்ப்பூரம் எப்படித் தயாரிப்பது என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியுமோ தெரியாதோ. அதற்கு வேண்டிய சாதனங்கள் நம் ராஜ்யத்தில் இல்லை, வெகுவாக

9th September 1960]

வெளிநாட்டிலிருந்துதான் வந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது பரீட்சார்த்தமாக சர்க்கார் இந்தக் கர்ப்பூரம் விளைவிக்கக் கூடிய "ப்ளான்ட்" பயிராவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தம் கேள்விக்கு மீண்டும் இப்பொழுது பதிலளிக்கவேண்டுமென்று என்னிடம் கேட்டார். அதை ஏற்கனவே கனம் அங்கத்தினர் திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்கள் போட்டு அதற்குப் பதிலும் கொடுக்கப்பட்டு விட்டதால் அதை மறுபடியும் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

Questions are over.

[**Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—PRIVILEGE MATTERS.

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM** : Mr. Speaker, 9-30 a.m.
Sir, I would like at the outset, to express to you the gratification and appreciation of the entire House at the very firm stand you have taken regarding the question of jurisdiction that could be exercised over you. Sir, it is indeed a matter of pride to this Honourable House that we have in you an ideal Speaker. Sir, you and this House are quite zealous in upholding the dignity and the supremacy of this House. May I say, that this House and you, Mr. Speaker, are equally zealous about safeguarding the dignity, integrity and independence of the judiciary? I may also claim that we in this House are even more zealous in safeguarding the dignity and independence of the judiciary than the 120 learned advocates who are reported to have filed Vakkalats for the writ petition against you. Sir, you took your stand on Article 212 of the Constitution Article 212 (1) says—

"The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure."

Article 212 (2) also says—

"No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers."

Sir, not only are we interested in upholding the dignity of the House and the Judiciary but we are also vitally interested in safeguarding the sanctity of our Constitution and the House would remember that we had to pass an extraordinary piece of legislation in order to safeguard the sanctity of our Constitution. Sir, there is the other Article 211 which reads like this—

"No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties."